## தலைப்பு 206 – கலாச்சார அலுவல்கள் திணைக்களம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 ஜூன் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 ஜூலை 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) இவ்வறிக்கையின் 1.6.1(அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான எனது அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண பீ கணக்கு வரவு மீதி மற்றும் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் திறைசேரி கணினி அச்சுப் பிரதியின் படி வரவு மீதியிடையே ரூபா 444,761 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டதுடன், 2004 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் இந்த வித்தியாசத்தை இனங் கண்டு கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது இந்த வித்தியாசத்தை கண்டிறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் திறைசேரி கணினி அறிக்கையின் படி மீதியின் வித்தியாசத்தை இனங் கண்டு கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கபட வேண்டும். |

(ஆ) மூலதனச் செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 5,210,000 இற்காக பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட 02 வாகனங்களின் பெறுமதி ரூபா 6,640,000 தொகை என ரூபா 1,340,000 தொகை மிகையாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டில் இந்த வாகனம் திருப்பவும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டதுடன், அந்த புதிய பெறுமதி மதிப்பீட்டின் படி 2022 ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | 2021 ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் மிகையாக காட்டப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 12,928,192 இற்கான பெறுமதியுடைய நாட்குறிப்பு 16 இற்குரிய நாட்குறிப்பு உறுதிச் சீட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரியான செலவு விடயங்களுக்கு வரவு வைப்பதற்காக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நாட்குறிப்பு உறுதிச் சீட்டுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6.3 பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணக்கமின்மை

மீளாய்வாண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அத்தேவையினை விளகிய சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வெளியீடுகள் இருப்புக் களஞ்சியத்தில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட, 2021 ஆண்டு கொள்வனவு செய்திருந்த ரூபா 5,447,174 தொகைக்கான 15,256 புத்தகங்களும் உட்பட 83,336 இற்கான வெளியேடுகள் இருப்பின் பெறுமதி கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், இது தொடர்பான கணக்கீட்டுக் கொள்கையினை வெளிப்படுத்தியிருக்கவில்லை. | குறிப்பிட்ட இருப்புக்கு கணிப்பீட்டு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. | வெளியீடுகளின் இறுதி இருப்புப் பெறுமதி கணக்குகளில் காட்டுவதற்கும் மற்றும் குறிப்பிட்ட கணக்குக் கொள்கையை வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச இலக்கிய விருது விழாவிற்காக செலவு விடயம் 206-2-2-3-1409 கீழ் ரூபா 6,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போது, செலவு விடயம் 206-2-3-6-1409 (தேசிய கலை விழா) இன் கீழ் ரூபா 16,480,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன், விருது விழாவிற்காக ரூபா 9,767,150 தொகை செலவிடப்பட்டிருந்தது. | 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்குரிய இலக்கிய விழா 2021.12.03 திகதி நடாத்தப்பட்டது. மதிப்பீட்டுத் தொகை கிடைக்கப் பெறாமையால் தேசிய இலக்கிய விருது விழா நடாத்துவதற்காக தேசிய கலை விழா செலவு விடயத்தின் கீழ் நிதி பெற்றுக்கொள்வதற்கு நேரிட்டது. | குறிப்பிட்ட கருமத்திற்காக மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்குதல் சிறந்த முகாமைத்துவத்துடன் மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | 04 செலவு விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 5,497,119 இற்கான செலவுகள் நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் நிதி மாற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஏனைய 06 செலவு விடயங்களின் மூலம் செலவிடப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட செலவு விடயங்களுக்கு போதியளவு ஏற்பாடுகள் பாதீட்டின் மூலம் விண்ணப்பித்து பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கும் படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாவிடின் நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் நிதி ஏற்பாடுகளை மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றுக்களின் படி 02 செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 454,995 இற்கான மீதிகள் காட்டப்பட்டிருந்த போதிலும், அந்த பொறுப்புக்களுக்கு மேலதிகமாக 2022 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் 2021 ஆண்டிற்கான 17 செலவு விடயங்களின் கீழ் ரூபா 6,081,279 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதன்படி, நிதிக் கூற்றுக்களில் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் ரூபா 6,081,279 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2021.12.31 திகதியில் உள்ளவாறு குறிப்பிட்ட செலவு விடயங்கள் ஏற்பாட்டு எல்லைக்குள் மாத்திரம் செலவுகள் மேற்கொள்ளப்பட்டது. | ஆண்டிற்கான அனைத்து பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தினால் டவர் மண்டப அரங்க மன்றத்திற்கு செலுத்த வேண்டியிருந்த 2016 மற்றும் 2017 ஆண்டுகளுக்குரிய ரூபா 1,053,000 இற்கான மீதிகள் அந்த மன்றத்தின் நிதிக் கூற்றுக்களில் பெற வேண்டிய மீதி என காட்டப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் என காட்டப்பட்டிருக்கவில்லை. | டவர் மண்டப அரங்க மன்றத்திற்காக செலுத்த வேண்டிய அனைத்து பில் பத்திரங்களும் தீர்க்கப்பட்டுள்ளன. | டவர் மண்டப அரங்க மன்றத்தின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பெற வேண்டிய மீதிகள் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு மற்றும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே விவரிக்கப்பட்டு காட்டப்படுகின்றது.

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை | | | | |
| | (i) | உப பிரிவுகள் 4.2, 4.5, 4.6 மற்றும் 6.3 | 05 வருடங்களை மிகைத்துள்ள இறந்துள்ள 05 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 23,931 தொகைக்கான கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த கடன் மீதிகள் 20 வருடங்களுக்கு முன்னர் இருந்து காணப்படுவதுடன், கடன் கோவைகள் சுவடிக்கூடத்திலும் காணப்படவில்லை. அவர்கள் தொடர்பான விபரங்கள் ஏனைய பதிவேடுகள் ஊடாக கண்டறிவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| | (ii) | உப பிரிவு 4.5 மற்றும் 2015 ஒக்தோபர் 09 திகதிய இலக்கம் PFD/RED/2015/08 பொது(i) கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 4.3(உ) | 05 வருட காலத்தை மிகைத்துள்ள சேவை இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் இருவரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 36,380 இற்கான கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒரு உத்தியோகத்தரின் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அடுத்த உத்தியோகத்தரின் கடன் கோவையை கண்டறிய முடியாமல் உள்ளது. | தாபனக் கோவையின் மற்றும் குறிப்பிட்ட சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (iii) உப பிரிவுகள் 4.5, 4.6 மற்றும் 2019 ஜூன் 27 திகதிய 5/2019 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 3(உ) மற்றும் 4 | 05 வருட காலத்தை மிகைத்துள்ள சேவையை விட்டுச் சென்றுள்ள 12 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 101,673 தொகைக்கான கடன் மீதிகள் மற்றும் 06 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த இனங் காணப்படாத ரூபா 23,923 இற்கான கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தகவல்களை கண்டறிய தேவையான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு கடன் மீதிகளை தீர்த்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கும் படி விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு அறிவுருத்தப்பட்டது. | தாபனக் கோவையின் மற்றும் குறிப்பிட்ட சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 66(2), (3), (4) மற்றும் (5) | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்படாமல் நாட்குறிப்புக்களின் மூலம் செலவு விடயங்கள் / நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இடையே ரூபா 12,298,192 தொகை மாற்றப்பட்டிருந்தது. | பிழையான செலவு விடயங்களுக்கு வரவு வைக்கப்பட்டிருந்த செலவுகள் சரியான செலவு விடயங்களுக்கு மாற்றுவதற்காக இந்த நாட்குறிப்புப் பதிவு மேற்கொள்ளப்பட்டது. எதிர் காலத்தில் தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அறிவுரை வழங்கப்பட்டது. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (இ) | 2004 ஒக்தோபர் 11 திகதிய 118 இலக்கம் கொண்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பந்தி 1.1.7 | அரசாங்க அமைச்சுக்கள்/ திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 23 ஊழியர்களுக்குரிய ரூபா 90,568 தொகைக்கான 05 வருடங்களை மிகைத்துள்ள கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த மீதிகள் 20 வருடங்களுக்கு முன்னர் இருந்து காணப்படுவதுடன், அவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள இடங்களை கண்டறிவதற்காக குறிப்பிட்ட கோவைகள் அல்லது பதிவேடுகளை கண்டறிய முடியாமல் உள்ளது. | குறிப்பிட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2017 ஜூன் 19 திகதிய இலக்கம் 04/2017 கொண்ட திணைக்களச் சுற்றறிக்கை | | | |
| | (i) பிரிவு 03 | 1. சுற்றிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக மற்றும் மூவர் குழுவின் பரிந்துரையை பெற்றுக்கொள்ளாமல் ஒரு மாதத்திற்கு ரூபா 200,000 தொகை வீதம் பெண் கலைஞர் ஒருவருக்கு 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது முறையே ரூபா 1,200,000 தொகை மற்றும் | 2018 ஜூன் 27 திகதிய அமப/18/1228/801/008 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், ஜனாதிபதி செயலாளரினால் வழங்கப்பட்டிருந்த கட்டளையின் படி, 2019 | குறிப்பிட்ட சுற்றிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா 2,400,000 தொகையாக மொத்தம் ரூபா 3,600,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நவம்பர் மாதம் முதல் இந்த கொடுப்பனவு தேவையுள்ள கலைஞர்கள் செலவு விடயத்தின் கீழ் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| | | 2. | மூவர் குழுவின் அங்கீகாரம் இன்றி 16 கலைஞர்களுக்கு ரூபா 1,190,000 இற்கான கலைஞர்களுக்கான விஷேட உதவி வழங்கப்பட்டிருந்தது. | விஷேட உதவிக் குழுவின் பரிந்துரையின் மீது உதவி வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், சுற்றறிக்கையின் திருத்தம் விரைவாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குறிப்பிட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) | பிரிவு 2(ii) | | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக ஊடகவியலாளர் ஒருவரின் இறப்பு தொடர்பாக ரூபா 503,500 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. | ஊடகவியலாளரின் ஈமக்கிரியைகள் அரச அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என பிரதமரால் கட்டளை இடப்பட்டுள்ளதென அறிவித்து, புத்த சாசன, சமய கலாசார அலுவல்கள் அமைச்சுச் செயலாளர் 2021.02.22 திகதி வெளியிட்டுள்ள கட்டளையின் படி விஷேட சந்தர்ப்பம் ஒன்றென கணித்து இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------------- | --------------------------------------- | ------------------------ |
| (அ) | திணைக்களத்தில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டு கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குவதற்காக ரூபா 100,000 இற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், கலைஞர்களுக்காக இலத்திரனியல் அடையாள அட்டைகள் விநியோகிப்பதற்காக தேசிய மரபுரிமைகள், அருங்கலை கிராமிய சிற்பக் கலை மேம்படுத்தல் | கலைஞர்களுக்காக அடையாள அட்டை வழங்குதல் திணைக்களத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நீண்ட காலமாக உட்படுத்தப்பட்டு செலவு விடயங்கள் ஊடாக ஏற்பாடுகளும் ஒதுக்கப்பட்டிருந்த விடயம் ஒன்றாகும். அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருந்த தேசிய மரபுரிமைகள், அருங்கலை கிராமிய சிற்பக் கலை மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சு மூலமும் | திணைக்களங்கள் / அமைச்சுக்கள் அவற்றின் குறிக்கோள்கள் மற்றும் கருமங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டு அதன் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளும் போது இரட்டை செலவு ஏற்படுதலை தவிர்க்க |

| | | |
|---|---|---|
| இராஜாங்க அமைச்சுக்காகவும் ரூபா 2,000,000 இற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டு அந்தக் கருமங்கள் 02 நிறுவனங்களினாலும் நிறைவேற்றப்பட்டு அதற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த கருமம் நிறைவேற்றப்படல் தொடர்பாக பதில் சமர்ப்பிக்க முடியாது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) தேசிய இலக்கிய விழா, பெரஹரா உதவி மற்றும் பொஸொன் ஹேவிசி பூஜை மற்றும் தேவையுடைய கலைஞர்களுக்கு உதவி வழங்கள் ஆகிய கருமங்களுக்காக முறையே ரூபா 4,000,000 தொகை, ரூபா 4,000,000 தொகை மற்றும் ரூபா 32,000,000 தொகை ஏற்பாடுகள் திணைக்களத்திற்கு வழங்கியிருந்ததுடன், அதற்கு சமமான கருமங்களாகிய தேசிய இலக்கிய கலை விழா, பெரஹரா மற்றும் ஏனைய கலாச்சார நிகழ்வுகளுக்காக பங்களிப்பு மற்றும் கலைஞர்களுக்கு வாழ்வாதாரம் வழங்குவதற்காக புத்த சாசன சமய கலாசார அலுவல்கள் அமைச்சிற்கு முறையே ரூபா 20,000,000 தொகை, ரூபா 10,000,000 தொகை மற்றும் ரூபா 5,000,000 தொகை ஏற்பாடுகள் வழங்கப்பட்டு அந்தக் கருமங்கள் 02 நிறுவனங்களின் மூலம் நிறைவேற்றிக்கொண்டு அதற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தேசிய இலக்கிய விழா, பெரகரா உதவி மற்றும் பொஸொன் ஹேவிசி பூஜை மற்றும் தேவையுடைய கலைஞர்களுக்கான உதவி ஆகிய நிகழ்ச்சித் திட்டங்கள் திணைக்களத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நீண்ட காலமாக உட்படுத்தப்பட்டு குறிப்பிட்ட செலவு விடயங்களும் ஊடாக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ள கருமங்கள் ஆகும். | திணைக்களங்கள் / அமைச்சுக்கள் அவற்றின் குறிக்கோள்கள் மற்றும் கருமங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டு அதன் மீது செயற்பட வேண்டியிருந்ததுடன், ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளும் போது இரட்டை செலவு ஏற்படுதலை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் கூட்டுத்தொகை ரூபா 8,800,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த ஆண்டின் போது செயற்படுத்தப்பட வேண்டியிருந்த மாவட்ட இலக்கிய விழாக்கள் அறுபத்தி நான்கு வகை கலை உட்சவம், மஹா வம்சம் தொடர்பாக அறிமுகப்படுத்தல் மற்றும் அறிவுருத்தல், தொலஸ்மஹே பஹன மற்றும் சுபாசித கீ விமன | புத்தகக் கண்காட்சியுடன் சம நிகழ்வாக நடாத்தப்பட்டு வரும் அறுபத்து நான்கு வகை கலை உட்சவம், சுபாசித கீ விமன மற்றும் மஹா வம்சம் வெளியீடு என்பன கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக நடாத்தப்படவில்லை. தொலஸ்மஹே பஹன நிகழ்ச்சித் திட்டத்திற்காக மாவட்ட அலுவலகங்களுக்கு உரிய | ஆண்டின் போது மேற்கொள்ளக்கூடிய கருமங்கள்/செயற்பாடுகள் தொடர்பாக முறையான ஆய்வு மற்றும் மதிப்பீட்டின் பின்னர் கருமங்களுக்காக திட்டமிடப்பட வேண்டியதுடன் திட்டமிடப்பட்ட கருமங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆகிய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக நடாத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டது. | |

### 3.3 பிரதான கருமங்களுக்கு முரணான செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம், மஹாவம்சம் தொடர்பாக அறிவுருத்தல் மற்றும் அறிமுகப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம், வலிசிங்க ஹரிஸ்சந்திர கேந்திர நிலையத்தின் மதில் நிர்மாணித்தல் மற்றும் மிஹிந்தலை வடக்குக் கிழக்கு நண்பர்கள் இல்லத்தில் வாயு சீராக்கி பொருத்துதல், பீம் தயாரித்தல் என்பவற்றிற்காக முறையே ரூபா 2,200,000 தொகை, ரூபா 800,000 தொகை மற்றும் ரூபா 300,000 தொகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது குறிப்பிட்ட கருமங்கள் மேற்கொள்ளப்படாமல் அதற்குப் புறம்பான கருமங்களுக்காக ரூபா 1,285,867 தொகை, ரூபா 669,405 தொகை மற்றும் ரூபா 97,189 தொகை செலவிடப்பட்டிருந்தது. | அந்த ஏற்பாடுகளின் மூலம் சுதந்திரச் சதுக்கத்தை நவீன மயப்படுத்தல், நடன பயிற்சிப் பாடசாலையை வர்ணம் தீட்டுதல் மற்றும் சிங்கள அகராதி அலுவலகத்தின் புனர்நிர்மாண அலுவல்கள் ஆகியன மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஆண்டின் போது மேற்கொள்ள வேண்டிய கருமங்கள்/செயற்பாடுகள் தொடர்பாக முறையான ஆய்வு ஒன்றின் மற்றும் மதிப்பாய்வு ஒன்றின் பின்னர் கருமங்களுக்காக திட்டமிடப்பட வேண்டியதுடன் திட்டமிடப்பட்ட கருமங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்படாத கலை நிலையங்களுக்கு இடையிலான அரச விருது விழாக்களுக்காக ரூபா 6,498,350 தொகை கலைஞர்கள் ஆரோக்கிய திட்டத்திற்காக ரூபா 658,000 தொகை மற்றும் கலாபூசன விருது பெறுவோருக்கு வெகுமதி என ஒருவருக்கு ரூபா 25,000 வீதம் 170 பேர்களுக்காக ரூபா 4,250,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மூலம் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக செலவிடப்படும் தொகை சரியாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் நிகழ்ச்சித் திட்டங்கள் வெவ்வேறாக காட்டப்பட்டிருக்காததுடன், எதிர் காலத்தில் அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆண்டின் போது மேற்கொள்ளக்கூடிய கருமங்கள்/செயற்பாடுகள் தொடர்பாக முறையான ஆய்வு ஒன்று மற்றும் மதிப்பாய்வு ஒன்றின் பின்னர் கருமங்களுக்காக திட்டமிடப்பட வேண்டியதுடன் திட்டமிடப்பட்ட கருமங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் வெளியிடுவதற்கு இலக்காகியிருந்த கலைக் களஞ்சிய தொகுதிகள் 20 ஆக இருந்ததுடன் 2014 ஆண்டு வரை 14 தொகுதிகள் மாத்திரம் வெளியிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஆண்டின் போது ரூபா 5,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 07 வருட காலம் கடந்திருந்த போதிலும் அடுத்த தொகுதி வெளியிடப்பட்டிருக்கவில்லை. | கலைக் களஞ்சியம் தொகுத்து வழங்குதல் நீண்ட சிக்கலான செய்முறை ஒன்று கடைபிடிக்கப்பட வேண்டியிருந்ததுடன், சுமார் நான்கு வருட காலம் தேவைப்படுகின்றது. தற்போது பல வருட காலமாக ஆசிரியர் குழுவில் ஒரு ஆசிரியர் மாத்திரம் காணப்படுவதுடன், சிங்கள கலைக்களஞ்சியத்தின் 14 ஆவது தொகுதி அப்படியான சூழ்நிலையிலேயே வெளியிடப்பட்டிருந்தது. | கலைக் களஞ்சியத் தொகுதி வெளியிடுவதற்காக திட்டங்கள் மற்றும் இலக்குகள் நிறுவிக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 திகதிய 2/2020 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 10.2 இற்கு இணங்க பொது நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்துக்கு இணங்க வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1956 செப்தம்பர் மாதம் 26 திகதிய 10975 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்த திணைக்களம் நிறுவப்பட்டதென செயலாற்றுகை அறிக்கையில் காட்டப்பட்டிருந்த போதிலும், அந்த அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திணைக்களம் நிறுவப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டதுடன், திணைக்களம் நிறுவப்பட்டமை தொடர்பான பதிவேடுகள் மற்றும் திணைக்களத்திற்கு பணிப் பொறுப்புக்கள் சாட்டப்பட்ட பதிவேடுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட பதிவேடுகளை எதிர் காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். | செயலாற்றுகை அறிக்கையின் தகவல்கள் சரியாக காட்டுவதற்கும் மற்றும் திணைக்களம் நிறுவுதல் மற்றும் பணிப் பொறுப்புக்கள் சாட்டப்படுதல் தொடர்பான பதிவேடுகள் கணக்காய்விற்கு வழங்குதவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதி அல்லாத சொத்துக்கள் என ரூபா 1,325,765,846 தொகை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் செயலாற்றுகை அறிக்கையில் நிதியல்லாத சொத்துக்கள் அறிவிக்கும் செயலாற்றுகையின் கீழ் குறிப்பிட்ட சொத்துக்களின் பெறுமதி என ரூபா 982,660,597 தொகை அதாவது ரூபா 343,105,249 தொகை குறைவாக அறிவிக்கப்பட்டிருந்தது. | இந்த தவறினை இனங்காணப்பட்டதுடன், இறுதி முன்னேற்ற அறிக்கையில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | செயலாற்றுகை அறிக்கையில் தகவல்கள் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுதந்திர சதுக்க வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலைகள் அரச பெறுகைகள் வழிகாட்டல் 3.5.1(ஈ) இற்கு முரணாக நேர் ஒப்பந்த வேலை முறைமையின் கீழ் அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்திற்கு ரூபா 1,044,144 தொகைக்கு சாட்டப்பட்டிருந்ததுடன், வழிகாட்டல் 8.9.1 இற்கு இணங்க ஒப்பத்தக்காரருடன் எழுத்துமூல உடன்படிக்கை ஒன்றிற்கு அணுகியிருக்கவில்லை. திருத்த வேலைகள் 2021 ஜனவரி 27 திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 பெப்ரவரி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2020 ஆண்டில் ரூபா 2,022,562 தொகைக்கான சுதந்திரச் சதுக்கத்தின் திருத்த வேலை அலுவல்கள் அந்த திணைக்களத்திற்கு சாட்டப்பட்டிருந்த போதிலும், 2021 ஆண்டு இறுதி வரை குறிப்பிட்ட கருமத்தையும் பூர்த்தி செய்திருக்கவில்லை. | 2021 ஆண்டு சாட்டப்பட்ட திருத்த வேலைகள் 2021.01.27 திகதி பூர்த்தி செய்யும் படி அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்திற்கு அறிவித்திருந்ததுடன் சுதந்திர தின விழாவிற்கு தேவையான திருத்த வேலைகள் விரைவாக பூர்த்தி செய்யப்பட்டன. மீதியான திருத்த வேலைகளை பூர்த்தி செய்யும் படி 2021.10.26 திகதிய இலக்கம் DCA/04/03/12/2021-93 கடிதத்தின் மூலம் ஞாபகப்படுத்தல் கடிதம் அனுப்பப்பட்ட போதிலும் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக குறிப்பிட்ட காலத்தினுள் குறிப்பிட்ட திருத்த வேலைகளை பூர்த்தி செய்ய முடியாமல் போனது. | அரச பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டியதுடன், ஒப்பந்த வேலைகள் சாட்டுதல் செய்யும் போது முன்னைய ஒப்பந்தங்களின் பூர்த்தி செய்தல் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| **(ஆ) ஜோன் டீ சில்வா ஞாபகார்த்த நாடக அரங்கு நவீனமயப்படுத்தல் - முதலாம் கட்டம்**<br><br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) 2011 செப்தம்பர் 15 திகதிய அமப/11/1673/547/021 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்திற்கு முரணாக 2013 நவம்பர் மாதம் நாடக அரங்கு உடைத்து அகற்றப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 3,641,618 இற்கான கிரயம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், 2014 பெப்ரவரி 20 திகதி நாடக அரங்கத்தை நவீனமயப்படுத்துவதற்காக இலக்கம் CA/03/2014 கொண்ட அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட விஞ்ஞாபனத்தின் மூலம் நவீனமயப்படுத்தி அபிவிருத்தி செய்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அப்போது ஜோன் டி சில்வா ஞாபகர்த்த நாடக அரங்கு திருத்த வேலை அல்லது பழுதுபாரத்தல் மேற்கொள்ளப்படாமல் உண்மையான நிலைமைக்கு ஆக்குவதற்கு முடியாத நிலையில் காணப்பட்டது. இதன் காரணமாக செய்ய வேண்டிய கருமங்கள் தொடர்பாக ஜோன் டீ சில்வா நாடக அரங்கு நவினமயப்படுத்துவதற்காக நியமனம் செய்யப்பட்ட மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் ஆலோசனைக் குழுவினால் அதனை மறுசீரமைப்பதற்காக செலவாகக் கூடிய பாரிய செலவின் தொகையினை கவனத்தில் எடுத்து புதிதாக நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைவாக செயற்பட முடியாவிடின் அது பற்றி அமைச்சரவைக்கு அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) நாடக அரங்கத்தினை நவீனமயப்படுத்தும் அலுவல்களுக்கான ஒப்பந்த வேலை பெறுகை வழிகாட்டல் கோவை 3.2.1 இற்கு முரணான வரையறுக்கப்பட்ட போட்டி விலைகூறல் அழைத்தல் மூலம் ரூபா 386,587,337 தொகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரருடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை பெறுகை வழிகாட்டல் 8.9.3 இற்கு முரணாக கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளரினால் கையொப்பம் இடப்பட்டிருந்தது. | ஜோன் டி சில்வா நாடக அரங்கு மற்றும் தேசிய கலா பவன வளாகங்கள் கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள் என்பதால் கலாச்சார பணிப்பாளரினால் கையொப்பமிடப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டலுக்கு இணங்க விலைகூறல் அழைப்பதற்காக மற்றும் உடன்படிக்கை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | ஒப்பந்தக்காரரினால் 03 வருட கால தாமதத்துடன், நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், தாமதக் கட்டணம் என அறவிடப்பட்டிருந்த ரூபா 38,658,734 இற்கான தொகை முறைவான அங்கீகாரம் மற்றும் நியாயமான காரணங்களினால் உறுதிப்படுத்திக்கொள்ளாமல் ஒப்பந்தக்காரருக்கு மீணடும் செலுத்தப்பட்டிருந்தது. | கட்டம் II நிர்மாண வேலைகள் ஆரம்பிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் ஒதுக்கப்படாமையால் அரசாங்கத்திற்கு நிதி நட்டமொன்று ஏற்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டமையால் அறவிடப்பட்டிருந்த தாமதக் கட்டணத்தை மீண்டும் ஒப்பந்தக்காரருக்கு திருப்பி வழங்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தக்காரருக்கு மீண்டும் செலுத்தப்பட்ட தாமதக் கட்டணத்தை திருப்ப அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | கட்டிடத்தை பூர்த்தி செய்து உரிய முறையில் ஒப்படைத்திருக்காத போதும் ரூபா 38,658,734 தொகைக்கான இறுதிக் கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், பெறுகை வழிகாட்டல் கோவை 5.4.6(ஆ) இற்கு முரணாக வேலை பூர்த்தி செய்யப்பட்டதற்கான என சான்றிதழ் ஒன்று இன்றி ரூபா 19,329,367 இற்கான தடுத்து வைத்தல் பணத்தின் 50 சதவீதம் அதாவது ரூபா 9,664,683 தொகையும் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | உசாத்துணை சேவை நிறுவனத்தின் பரிந்துரையின் மீது கொடுப்பனவு செய்யப்பட்டது. | நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டு உரிய முறையில் ஒப்படைத்த பின்னர் இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், தடுத்து வைத்த பணம் பெறுகை வழிகாட்டலுக்கு இணங்க செலுத்த வேண்டும் |
| (v) | வேலை பூர்த்தி செய்வதற்காக நேரிட்டிருந்த 03 வருட கால தாமதத்தின் காரணமாக பில் பத்திரங்களில் காணப்பட்ட விலை வேறுபாடுகளுக்காக ரூபா 9,257,523 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அது திணைக்களத்திற்கு ஏற்பட்ட நட்டம் ஒன்றாகும். | ஒப்பந்த உடன்படிக்கையின் படி விலை வேறுபாடுகளுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததனால் உசாத்துணை சேவை நிறுவனத்தின் பரிந்துரையின் மீது கொடுப்பனவு செய்யப்பட்டது. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க பெறுகை நேரசூசியின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (vi) | உசாத்துணை நிறுவத்துடனான உடன்படிக்கையின் படி நிர்மாண வேலை ஒப்பந்தக்காரரின் தடுத்து வைத்தல் பணத்தை விடுவிப்பதற்காக உரிய சான்றிதழ் வழங்கிய பின்னர் செலுத்த வேண்டிய இறுதி உசாத்துணை சேவைக் | ஒட்டுமொத்த மதிப்பீட்டிற்காக உசாத்துணை நிறுவனத்தினால் பரிந்துரை வழங்கப்பட்டிருந்ததுடன், அதன்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | வேலை பூர்த்தி செய்யப்பட்டு உரிய சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னர் இறுதி உசாத்துணை சேவைக் கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவு ரூபா 888,318 தொகையாக காணப்பட்டதுடன், அந்தத் தொகையில் ரூபா 444,159 தொகை உத்தரவாத காலம் முடிவடைய முன்னர் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (vii) | நாடக அரங்கு உடைக்கப்பட்டு 08 வருடங்கள் கடந்திருந்த போதிலும் மீண்டும் நிர்மாணித்து இது வரை பயன்படுத்த முடியாமல் காணப்பட்டது. | நாடக அரங்கின் இரண்டாம் கட்டத்திற்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், தற்போது நிர்மாண வேலை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு நாடக அரங்கினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(இ)** | **தேசிய கலாபவனத்தை முன்னேற்றி பாதுகாத்தல்**<br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | தேசிய கலாபவனத்தை நவீனமயப்படுத்துவதற்காக கடற்படைக்கு 2020 திசெம்பர் 31 திகதி செலுத்தியிருந்த ரூபா 5,500,000 தொகை பயன்படுத்தப்பட்டதென உறுதிப்படுத்துவதற்காக தேவையான ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பதில் வழங்கியிருக்கவில்லை. | ரூபா 5,500,000 இற்கான செலவுகளை உறுதிப்படுத்துவதற்காக தேவையான ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | 2 ஆம் கட்ட நிர்மாண வேலைகளுக்காக கடற்படையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செலவு மதிப்பீடு ரூபா 85,792,644 தொகையாக காணப்பட்ட போதிலும், அந்த மதிப்பீட்டை மிகைத்து உசாத்துணை நிறுவனத்தினால் ரூபா 88,086,213 தொகைக்கு ஒப்பந்த வேலை பரிந்துரைக்கப்பட்டிருந்தது. | கடற்படையினால் வழங்கப்பட்டிருந்த மதிப்பீட்டினை பரிசோதனை செய்து அதனை ரூபா 88,086,213 தொகை என திருத்தி உசாத்துணை சேவை நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. | கூடிய தொகையொன்றிற்கு பரிந்துரைக்கப் பட்டிருந்தமையால் ஏற்பட்டிருந்த நட்டம் ஒப்பந்த வேலையை பரிந்துரைத்த உசாத்துணை நிறுவனத்தினால் அனவல் செய்ய வேண்டும். |
| (iii) | ஒப்பந்த வேலையை ஒப்படைக்கும் போது பெறுகை வழிகாட்டல் 5.4.8 இற்கு இணங்க செயலாற்றுகை பிணைமுறி ஒன்று பெற்றிருக்கவில்லை. | தரைப்படையினால் மேற்கொள்ளப்படும் நிர்மாண வேலைகளுக்காக செயலாற்றுகை பாதுகாப்பு முறிகள் சமர்ப்பிக்கப்படுவதில்லை என கடற்படை தளபதியினால் 2021 ஏப்ரல் 23 திகதி பெற்றிருந்த கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | திணைக்களத்தினால் இலங்கை கடற்படைக்கு 04 சந்தர்ப்பங்களில் ரூபா 69,001,798 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மேற்கொள்ளப்பட்ட வேலைகள் எவை என உறுதிப்படுத்திக்கொள்வதற்கு தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேற்கொள்ளப்பட்ட கருமங்கள் தொடர்பாக உசாத்துணை நிறுவனவத்தினால் முறையான மேற்பார்வை ஒன்று மற்றும் மதிப்பாய்வொன்று மேற்கொண்டு உறுதிப்படுத்திக்கொண்ட பின்னர் ஏற்பாடுகளை விடுவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | கடற்படைக்கு ஏற்பாடுகள் விடுவித்தல் மேற்கொள்ளப்பட்டது உசாத்துணை சேவை நிறுவனத்தின் பரிந்துரையின் மீதே ஆகும். | ஏற்பாடுகளை விடுவிப்பதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட கருமங்கள் தொடர்பாக உசாத்துணை சேவை நிறுவனத்தினால் பரிந்துரை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) | கடற்படையினால் ரூபா 11,783,886 இற்காக மதிப்பிடப்பட்டிருந்த கட்டிடத்தின் தரை, சுவர்கள் மற்றும் சிவிலினை பூர்த்தி செய்தல் வெளி தனியார் தரப்பினர் மூலம் நிறைவேற்றிக்கொண்டிருந்த போதிலும் அதற்காக பெறுகை ஆணையகத்தின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. அதற்கான மதிப்பீடு ரூபா 7,868,802 தொகையினை மிகைத்து ரூபா 19,652,668 தொகை அந்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | கடற்படையினால் பெறுகை விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு அந்த விடயங்களை பூர்த்தி செய்வதற்காக வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. சிவிலின் தயாரிக்கும் போது நடைமுறை ரீதியாக ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக அதன் கிரயம் மதிப்பீட்டுத் தொகையை விட அதிகரித்திருந்தது. | துணை ஒப்பந்த வேலைகளுக்காக மற்றும் மதிப்பீட்டு ஏற்பாட்டு வரையறைகளை மிகைக்கும் போது செலவுகளை மேற்கொள்வதற்காக பெறுகை ஆணையகத்தின் அங்கீகாரத்தை பெற வேண்டும். |
| (vi) | 2 வது கட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த மேலதிக வேலைகளுக்காக ரூபா 4,703,308 இற்கான கிரயம் ஒன்று மேற்கொண்டிருந்த போதிலும் அதற்காக உசாத்துணை நிறுவனத்தின் பரிந்துரை பெற்றிருக்கவில்லை. | பதில் வழங்கியிருக்கவில்லை. | மேலதிக வேலைகளுக்காக உசாத்துணை சேவை நிறுவனத்தின் பரிந்துரையை பெற்றுக்கொள்ள வேண்டும். |

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் 2018 நவம்பர் 21 திகதிய இலக்கம் 267/2018 கொண்ட அரச கணக்கு சுற்றறிக்கையின் பந்தி 8.2 இற்கு இணங்க தொடர்ந்தும் அறிவிக்கப்பட வேண்டிய நிதி அல்லாத சொத்துக்கள் காணப்படின் அவற்றை உரிய முறையில் இனங்கண்டு கிரயத்திற்கு அல்லது கிரயத்தை இனங்காண முடியாவிடின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திணைக்களத்திற்கு சொந்தமான 05 கட்டிடங்கள், பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 66,000,000 தொகைக்கான 20 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 03 வாகனங்கள் மற்றும் 3.5731 ஹெக்டயர் அளவான 04 காணிகள் 2021 திசெம்பர் 31 திகதி வரையும் கணக்கீடு செய்திருக்கவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களுக்குரிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்தவுடன் கணக்கீடு செய்யப்படும். காணியை உரித்தாக்குவதற்கான அலுவல்கள் தொடர்பாக ஏற்பட்டுள்ள சிக்கல்களை தீர்த்துக்கொண்ட பின்னர் அந்தக் காணிகள் மற்றும் அவற்றில் அமைந்துள்ள கட்டிடங்களை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கும் அதன்படி கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பந்தி 8.2 இற்கு இணங்க திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து நிதி அல்லாத சொத்துக்களை இனங்கண்டு கிரயம் அல்லது பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி மீது கணக்கீடு செய்ய வேண்டும். |

### 3.8 அரச உத்தியோகத்தரின் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 880 முதல் 893 வரையான பிரமாணங்கள் மற்றும் 612 ஆவது அதிகாரத்தின் மீதான அரச உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்க வேண்டிய 52 உத்தியோகத்தர்கள் கடந்த ஆண்டு இனங்கண்டிருந்த போதிலும், அந்த உத்தியோகத்தர்களிடம் பிணைகள் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிணை வைக்க வேண்டிய தொகை மற்றும் பிணை வைக்க வேண்டிய முறை தொடர்பாக அமைச்சுச் செயலாளரிடம் ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது. ஆலோசனை கிடைத்தவுடன் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடம் பிணையை பெற்றுக்கொள்வதற்காக தாமதம் இன்றி செயற்பட வேண்டும். |

## 4 நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 40 இற்கு இணங்க உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொண்டிருக்காததுடன், 2011 ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வாளர் பதவியை நிரப்புவதற்கு 2022 மே மாதம் வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது புத்த சாசன திணைக்களத்தின் கணக்காளர், உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளது. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 28 ஆகக் காணப்பட்ட திணைக்களத்தின் சிரேஷ்ட மட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 12, அதாவது 43 சதவீதம் வெற்றிடமாக காணப்பட்டது. பல வருட காலமாக வெற்றிடமாக காணப்படும் கணக்காளர் பதவியும் இதில் அடங்குகின்றது. | பொது நிருவாக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் பதவி வெற்றிடங்களுக்காக உரிய உத்தியோகத்தர்களை இணைத்துத் தரும்படி கடிதம் மூலம் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சிரேஷ்ட மட்டத்தில் அத்தியவசியமான பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |